# ஆழ்வார்கள் - ஒரு பன்முக நோக்கு

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## ஆய்வுக்கோவை

முதுகலை - தமிழ் உயராய்வு மையம்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

ஜூலை 24, 25 - 2017

| | | | |
|---|---|---|---|
| 171. | க. லதா | ஆழ்வார்களின் பாடல்களில் உறவுநிலை | 442 |
| 172. | மா. பாப்பா | இலக்கியமும் மொழிநடையும் | 444 |
| 173. | கி. புவனேஷ்வரி | ஆழ்வார் பாடல்களில் பெண்தன்மை ஏன்? | 447 |
| 174. | ஆ. குழந்தை | அருள்வாழ்வின் அறநெறிகள் | 449 |
| 175. | இரா. சங்கர் | மணக்கால் நம்பி வரலாறு | 453 |
| 176. | கு. சக்திவேல் | இராமானுஜர் சிறந்த ஆச்சாரியர் | 454 |
| 177. | எலிசெபெத்ராணி | வைணவ பெருமையும் அவதாரத்தின் சிறப்பும் | 457 |
| 178. | கா.க.இரவி | நம்மாழ்வார் | 462 |
| 179. | பெ.ம.பாரதி | நாலாயிரம் திவ்விய பிரந்தமும் செம்மொழி இலக்கியமே! | 464 |
| 180. | கு.மு.இராஜசேகரன் | ஆழ்வார்களின் வரலாறு | 466 |
| 181. | ஜெ. வீரநாதன் | ஆண்டாள் நாச்சியாரின் தமிழ்இலக்கியம் மற்றும் அறிவியல் பார்வை | 468 |
| 182. | செ. சண்முகநாதன் | ஸ்ரீ இராமானுஜர் | 471 |
| 183. | பி.ஜி. மோஹனலட்சுமி | ஆழ்வார்கள் வரலாறு | 473 |
| 184. | எம்.பி.மோகன் | ஸ்ரீமந் இராமானுஜர் | 475 |
| 185. | ஜொ.பொ.இரவி | பிள்ளைத்தமிழ் இலக்கிய முன்னோடி – பெரியாழ்வார் | 476 |
| 186. | அ.லட்சுமி | ஆழ்வார்களும் தமிழும் | 479 |
| 187. | நயம்பு. அறிவுடைநம்பி | திருமாலியத்தில் (வைணவத்தில்) சமத்துவ நெறி | 481 |
| 188. | ஏ.சி.வெங்கடேசன் | குலசேகர ஆழ்வாரின் வாழ்வியல் சிந்தனைகள் | 483 |
| 189. | இரா.மோகனசுந்தரம் | இராமானுஜர் வாழ்வும் புரட்சியும் | 487 |
| 190. | சு.கலைமணி மோகனசுந்தரம், | நம்மாழ்வார் நம் ஆழ்வார் | 490 |
| 191. | மு. ஜெயலட்சுமி | இராமானுஜரின் வரலாறு மற்றும் அவரது சிறப்பு | 492 |
| 192. | கெ. பக்தவச்சலம் | நம்மாழ்வார் நயந்த திருக்குறள். | 495 |
| 193. | சு. பாலு | ஆழ்வார்கள்: பொய்கை, பூதம், பேய் | 497 |
| 194. | வீ.கோவிந்தராஜ் | இலக்கியங்களில் பெருமைமிகு திருமால் வழிபாடு | 498 |
| 195. | எ.எம்.நாகூர் ஹனீபா | ஆழ்வார் பாசுரங்களில் அணி | 501 |
| 196. | ஸ்ரீமதி எஸ்.குமுதா வரதராஜன் | மதுரகவி ஆழ்வாரின் பெருமை | 503 |
| 197. | செ. இராஜ்குமார் | தொண்டரடிப்பொடியாழ்வாரின். சரணாகதி | 505 |
| 198. | பே.சுப்பிரமணி | ஆழ்வார்கள் வாழ்வும், வரலாறும் - ஒரு பார்வை | 507 |
| 199. | சு.சசிரேகா | திருவாய்மொழிக்கு உரை வகுத்த ஆசாரியர்கள் | 511 |
| 200. | கி.பிரபா | நம்மாழ்வா | 513 |
| 201. | எஸ். காமேஸ்வரி | ஸ்ரீமத் விகனஸாசார்ய தோற்றமும் பூஜைமுறையும் | 517 |
| 202. | வ. வாசுதேவன் | திருவாய்மொழி: தத்துவ நோக்கு | 519 |
| 203. | மு. சத்தியலிங்கம். | ஸ்ரீ இராமானுஜரால் வைணவம் பெற்ற சிறப்பு | 522 |
| 204. | அ. ஏகவள்ளி | நம்மாழ்வார் அருளும் பக்தி நெறிகள் | 526 |
| 205. | ம. ராணி | திருமங்கையாழ்வாரின் மடல் நூல்கள். | 529 |
| 206. | ஜெ. கவிதா | ஆண்டாள் எனும் பெண் உரு | 532 |
| 207. | க.லதாமங்கேஷ்கர் | ஆச்சாரியர்கள் | 533 |
| 208. | கோ.மாலா | ஸ்ரீ இராமானுஜர் - ஒரு பன்முக நோக்கு | 535 |
| 209. | ஜோ. இளங்கோவன | ஆழ்வார் பாசுரங்களில் காணப்படும் பக்திநெறிகள் | 537 |
| 210. | த. ரூபி | திருப்பாணாழ்வார் | 539 |
| 211. | ப. தேன்மொழி | மார்கழியும் நோன்பும் | 541 |
| 212. | ரா. ரஜுலா | ஆண்டாளின் திருமண நிகழ்ச்சி | 543 |
| 213. | திரு.ச.பிரவீன்குமார் | இராமானுசன் என்னும் புரட்சி வீரன் | 546 |
| 214. | சே.சொ.நடராசன் | ஆழ்வார்கள் பாசுரங்கள் இயற்கை சார்ந்த உவமைகள் | 548 |
| 215. | கொ.சு.தமிழரசு | நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் புதுமை நோக்கு | 550 |
| 216. | ஜெ.ஜெயந்தி | பன்னிருஆழ்வார்களின் வரலாறு | 552 |
| 217. | அ. அமல் ராஜ் | திருமழிசைத் திருக்கோயில் வரலாறு | 553 |
| 218. | செ. வெள்ளத்துரை | வைணவ உரையாசிரியர்களின் வரலாறு | 556 |
| 219. | பா.கோபிநாத் | திருமழிசைத் திருக்கோயில் வழிபாடுகள் | 558 |
| 220. | ர.பாலசந்தர் | நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு புகழ்மாலை சூட்டிய வைணவ உரையாசிரியர்கள் | 560 |
| 221. | ர.பாலசந்தர் | ஸ்ரீ இராமனுசரின் வைணவத் தொண்டு | |
| 222. | மு. மணி | பெரியாழ்வாரின் உவமையில் திருமாலின் பெருமைகள் | 563 |
| 223. | எஸ்.ஜி. சுப்ரஜா | பெரியாழ்வார் பாசுரங்களில் இசைக் கருவிகள் | 566 |
| 224. | சாந்தி மகாலிங்கசிவம் | மீள்வாசிப்புத் தளத்தில் விசிட்டாத்வைதம் | 569 |
| 225. | எஸ். கோவிந்தராஜன் | வைணவத்தில் மூர்த்த வழிபாடு | 571 |
| 226. | எம். ராஜேஷ்குமார் | பெரிய திருமொழியில் சங்கத்தமிழ் | 574 |
| 227. | ர. சதீஷ் | திருமாலைப் போற்றும் ஆண்டாள் | 576 |
| 228. | கோ.அ. லீலாவதி | ஆழ்வார் பாசுரங்களில் இசைக் கருவிகள் | 528 |
| 229. | கி. சோபனா | குலசேகராழ்வார் பாசுரங்களில் நாட்டுப்புறக்கலைகள் | 582 |
| 230. | ர. உத்தமி | ஆழ்வார்களின் தமிழ் தொண்டும் சிறப்புகளும் | 585 |
| | | | 587 |

**முனைவர் க. லதா,**

இணைப்பேராசிரியர்,

தமிழ் உயராய்வு மையம்,

பாத்திமா கல்லூரி, மதுரை.



## 171. ஆழ்வார்களின் பாடல்களில் உறவுநிலை

ஆழ்வார்களின் பாடல்கள் அவர்கள் திருமால் மீது கொண்ட ஆழ்ந்த பக்தியுணர்வினைப் புலப்படுத்துகின்றன. 'மாதவனையல்லாது இறையேதும் ஏத்தாது என் நா' என்ற கோட்பாடு அவர்களுடையது. மாயவனை, திருமாலை அனைத்து உறவுநிலைகளிலும் அவர்கள் கண்டனர். அதன் விளைவாக அவர்கள் உணர்ந்தவற்றைப் பாடல்களாகப் புனைந்துள்ளனர். அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரை விளக்குகிறது. ஆழ்வார்களுள் தலைமைத் தன்மை வாய்ந்தவர் என்று அழைக்கப்படும் நம்மாழ்வார், திருமாலைத் 'தலைவன்' என்கிறார். அத்தலைவனுக்கு உருவமில்லை; அவன் ஆணும் பெண்ணுமல்லன் எனப்பாடுகிறார்.

*"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்*
*காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்*
*பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்*
*கோனை பெரிதுடைத்தெம் பெருமானைக் கூறலே"* (திருவாய்மொழி 2.5)

இப்பாடல்வழி இறைவன் அனைத்தும் கடந்த குணநலன்கள் கொண்டவன் என்பதை நம்மாழ்வார் புலப்படுத்துகிறார். ஆண், பெண், அலி, உரு, அரு என அனைத்துத் தோற்றங்கள் கடந்து நிற்பவன் திருமால். அவனே என் தலைவன் என்று பாடுகிறார் அவர். திருமங்கையாழ்வார், உலகப்பற்று நீக்கினால் இறைப்பதம் சேரலாம் எனப்பாடியுள்ளார்.

*"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றினைப்*
*பற்றுக பற்று விடற்கு"* என்பார் வள்ளுவர். உலகப் பற்றுகளாகிய உறவுகளை விட்டு விலகினால் இறையடி இணைதல் எளிது என்பதை,

*"ஆண்டாய் உனைக் காண்பதோர் அருள் எனக்கு அருளுதியேல்*
*வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே"* (பெரிய திருமொழி 5) என்று பாடுகிறார். மேலும்,

*"தாயே தந்தை யென்னும் தாரமே கிளை மக்கள் என்றும்*
*நோயே பட்டொழிந்தேன் உனைக் காண்பதோ ராசையினால்*
*நாயேன் வந்தடைந்தேன் .................................." (பெரியதிருமொழி - 9)*

என்று பாடி, லௌகீக வாழ்க்கையையும் உறவுகளையும் நோயென்று பாடுகிறார். இதன்வழி இறைவனுக்கும் தனக்குமான உறவே நித்திய உறவு நிலைத்த உறவு என்று உணர்த்துகிறார். உறவுகளை மாயையென வெறுத்து ஒதுக்கும் அவர்கள் இறைவனையே தாயாய், தந்தையாய்க் காண்கின்ற நிலையையும் ஆழ்வார்களின் பாடல்களில் காணமுடிகிறது.

*"பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ"* (பெரியதிருவந்தாதி - 5) என்று நம்மாழ்வார் பாடியுள்ளார். அனைத்தும் இறைவனே என்று நினைக்கும் அவர்கள் இல்லற வாழ்வின் உறவுநிலைகளைத்தான் இறைவனிடம் காண்கின்றனர். 'மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று பாடிய ஆண்டாளின் பாடல்கள் அவள் இறைவன் மீது கொண்ட தெய்வீகக் காதலைப் புலப்படுத்தி நிற்கின்றன. 'வாரணமாயிரம்' எனத் தொடங்கும் திருமணக்கனவுப் பாடல் இறைவனையே கணவனாக வரித்த அவளுடைய மனத்திண்மையை வெளிப்படுத்துகிறது.

*"பேசுவ தொன்றுண்டிங் கெம்பெருமான்*
*பெண்மையைத் தலையுடைத் தாக்கும் வண்ணம்*
*கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னுயிர்*
*பேறெனக் கருளுகண்டாய்"* (நாச்சியார் திருமொழி - 511) என்ற பாடலில் ஆண்டாள் கீழ்வருமாறு சொல்கிறாள். "தன்னுடைய பெண்மையை ஜீவித்திருக்கும்படி செய்வதற்குக் கண்ணபிரானுக்குக் கால்பிடிப்பவள், தான் தான் என்கிற பேற்றைத் தனக்கு அருள வேண்டும்." இவ்வாறு தன்னை ஒரு சேவகியாய் கண்ணனைத் தன்னை ஆள்பவனாய் சித்திரிக்கிறாள் ஆண்டாள். பிள்ளைத் தமிழின் முன்னோடி எனப்படும் பெரியாழ்வார் பாடல்கள் அவரைத் தாயுமானவராகவே சித்திரிக்கின்றன. யசோதையாகவே மாறி, கண்ணன் செய்யும் குறும்புகளில் திளைத்து, வருந்தி, மகிழ்ந்து, சிரித்து என அனைத்து உணர்வுகளையும் கலந்து தாயின் நிலையில் இருந்து பாடிய பாடல்கள் எண்ணி எண்ணி இன்புறத்தக்கவையாகும்.

*'கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்'* என வருந்தும் அவர், 'மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்' எனப் பாடும்போது மகனைப் பெற்ற தாயின் கர்வம் மேலோங்கப் பாடியிருப்பார். கண்ணனைப் பற்றிய

ISBN: 978-93-5265-628-8